INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | DigitalAccess @Home

# மானிய விலையில் இணைப்பு மற்றும் மடிகணினிகள் / கைக்கணினிகள் பெறுங்கள்

## DigitalAccess@Home

குறைந்த வருமானக் குடும்பங்களின் வேலை, சமூக நடவடிக்கைகள் உள்ளிட்ட வாழ்க்கைமுறைத் தேவைகளுக்கு ஆதரவளிக்க, மானிய விலையில் விரிவலைச் சேவையுடன் மடிகணினிகள் / கைக்கணிகள் வழங்கப்படுகின்றன.

# யாரெல்லாம் விண்ணப்பம் செய்யலாம்?

வீவக வீடுகளில் வசிக்கும் குறைந்த வருமானக் குடும்பங்களில் குறைந்தது ஒருவராவது சிங்கப்பூர் குடியுரிமை பெற்றிருந்தால், வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யத் தகுதி பெறுவார்கள்.

மானிய விலையில் விரிவலைச் சேவையை அல்லது சாதனங்களைத் தற்போது பெற்றுள்ளவர்களுக்கு (வீடுகளுக்கான விரிவலைச் சேவை அல்லது NEU PC Plus திட்டங்களின்கீழ்), வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டத்தின்கீழ் முறையே மானிய விலையில் விரிவலைச் சேவை அல்லது சாதனங்கள் வழங்கப்படாது.

நீங்கள் விண்ணப்பம் செய்வதற்கு முன்னதாக, உங்களது தகுதிநிலையை www.go.gov.sg/digitalaccesschecker இணையத்தளத்தில் உள்ள சுய மதிப்பீட்டுக் கணிப்பானைப் பயன்படுத்தி சரிபார்ப்பது நல்லது.

# நான் எவ்வளவு பணம் செலுத்தவேண்டும்?

## (இணைக் கட்டணம்)

நீங்கள் செலுத்தவேண்டிய இணைக் கட்டணம், நீங்கள் தேர்ந்தெடுக்கும் பொருட்களுக்கு ஏற்ப இருக்கும். இணைக் கட்டணத் தொகைகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது:

| விண்ணப்ப வகை | விரிவலைச் சேவை[3] (ஒரு மாதத்திற்கு) | கைக்கணினி[4] | மடிகணினி[4] |
|---|---|---|---|
| பிரிவு 1 / பொது வாடகை வீட்டுத் திட்டம்[1] | $5 | $75 - $85 | $220 - $235 |
| பிரிவு 2 / 1 – 3 அறை வீட்டில் வசிப்பவர்[2] | $10 | $155 - $165 | $445 - $475 |
| பிரிவு 3 / 4 அறை மற்றும் அதைவிடப் பெரிய வீட்டில் வசிப்பவர் | $15 | $230 - $250 | $665 - $710 |

[1] சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சின் காம்கேர் உதவி அல்லது கல்வி அமைச்சின் நிதி உதவி[5] பெறுபவர் இருப்பதோடு, குடும்பத்தின் மொத்த வருமானம் ≤ $1900 அல்லது தனிநபர் சராசரி வருமானம் ≤ $650 கொண்ட குடும்பங்கள் இந்தப் பிரிவின்கீழ் ஆதரவுக்குத் தகுதிபெறும்.

[2] கல்வி அமைச்சின் நிதி உதவித் திட்டத்தின்கீழ் உதவி பெறுபவர் இருப்பதோடு, குடும்பத்தின் மொத்த வருமானம் $1900க்கு மேலிருந்து $3,400 வரை அல்லது தனிநபர் சராசரி வருமானம் $650க்கு மேலிருந்து $900 வரை உள்ள குடும்பங்கள் இந்தப் பிரிவின்கீழ் ஆதரவுக்குத் தகுதிபெறும்.

[3] 500 Mbps விரிவலைச் சேவைக்கானது. 1Gbps விரிவலைச் சேவைப் பெறுவதற்கு, ஒவ்வொரு குடும்பமும் மாதத்திற்குக் கூடுதலாக $5 செலுத்தவேண்டும்.

[4] வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மின்னிலக்கச் சாதனங்களுடன் மைக்ரோசா.ஃப்ட் ஆபிஸ் மென்பொருள் (மடிகணினிகளுக்கு மட்டும்), 3 ஆண்டுகளுக்கு வைரஸ் தடுப்பு மென்பொருள் சந்தா, 3 ஆண்டுகால உத்தரவாதம் ஆகியவை கிடைக்கும்.

[5] இதில் மத்திய பள்ளிகளுக்கான கல்வி அமைச்சின் நிதி உதவித் திட்டம், சிறப்புப் பள்ளிகளுக்கான சிறப்புக் கல்வி நிதி உதவித் திட்டம் (SPED-FAS) ஆகியவை உள்ளடங்கும்.

# நான் என்ன செய்ய வேண்டும்?

GO.gov.sg

நீங்கள் தகுதி பெறுகிறீர்களா என்பதை www.go.gov.sg/digitalaccesschecker இணையத்தளத்தில் தெரிந்து கொள்ளுங்கள் அல்லது மேல்விவரம் அறிய:

- தகவல்தொடர்பு, ஊடக மேம்பாட்டு ஆணையத்துடன் 6377 3800 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்
- digitalaccess@imda.gov.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்
- https://go.gov.sg/sgdcommhub இணையத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள சமூக மன்றங்களிலும் பொது நூலகங்களிலும் அமைந்துள்ள எங்களது எஸ்ஜி மின்னிலக்கச் சமூக நடுவங்களுக்குச் செல்லுங்கள்

இங்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் அச்சிடும் சமயத்தில் துல்லியமானவை, மாற்றங்களுக்கு உட்படக்கூடியவை. அண்மைத் தகவல்களுக்கு, www.digitalaccess.gov.sg இணையத்தளத்தை நாடுங்கள்.

2023 ஏப்ரல் மாதம் அச்சிடப்பட்டது.

In support of: DIGITAL FOR LIFE PLAY IT FORWARD

In collaboration with: AMP SINGAPORE, 华社自助理事会 CDAC, Eurasian Association Singapore, ITE, Yayasan MENDAKI, SINDA Singapore Indian Development Association, SPD Serving people with disabilities since 1964, SG:DIGITAL OFFICE